இணைப்பு - V

(537 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை

அறிவிப்புகள், 2010–2011

1. மின்னணு அலுவலகம் (E-Office)

தலைமைச் செயலகத்தில் உள்ள துறைகளில், கோப்புகளை துரிதமாக கையாளுவதற்காகவும், அவற்றின் நிருவாகத்தை துரிதப்படுத்த உதவிடும் வகையிலும், மின்னணு அலுவலகத் தொகுப்பு ஒன்று தலைமைச் செயலகத்திற்கென உருவாக்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களின் கோப்புகளை திறம்பட கையாளுவதற்காக இதேபோன்ற ஒரு மின்னணு அலுவலகத் தொகுப்பு ஒன்றும் உருவாக்கப்படும்.

2. துறைவாரியான மின் ஆளுமைத் திட்டம் (Departmental e-Governance Plan)

மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய மின் ஆளுமை மிகவும் அவசியமானதாகும். 3 வருடங்களுக்கான மின் ஆளுமை திட்டத்தை வருடவாரியான தெளிவான வழிமுறைகளுடன் உருவாக்கும்படி அனைத்துத் துறைகளும் கேட்டுக் கொள்ளப்படும். இந்தத் திட்டம், தேவையான மென்பொருள் உருவாக்கவும், தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு, திறன் உருவாக்கத் திட்டம், செயல்முறை மறுசீரமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாகவும், மின் ஆளுகைக்கான துறைவாரியான பொருத்தமான அணுகுமுறையைத் திட்டமிட உதவும் செயல்பாடுகளுக்குப் பொருந்தக்கூடிய வகையிலும் இருக்கும்.

3. ஒருங்குறியை தமிழ் குறியீட்டின் தரமாக அமைத்தல் (Unicode as the standard for Tamil encoding)

தமிழ் எழுத்துக்களின் வடிவங்கள் தனியாருக்குச் சொந்தமான காப்புரிமையுடன் உள்ளன. இதனால் கணினி மற்றும் இணையதளத்தில் தமிழின் பயன்பாடு வளர்வது தடைபடுகிறது.

தமிழ் மொழியின் வளர்ச்சி கருதியும், அதன் பயன்பாட்டினை கணினி இணையதளத்தில் அதிகரித்திடவும் தமிழ் குறியீட்டின் தரமாக ஒருங்குறி (Unicode as the standard for Tamil encoding) ஏற்படுத்தப்படும். இது அனைத்துத் துறைகளும், இலவச தமிழ் எழுத்துருக்களை உபயோகப்படுத்திட வழிவகை செய்வதோடு பொது மக்களும் தமிழ் எழுத்து சார்ந்த தகவல்களை இணையதளம், மின்னஞ்சல் ஆகியவை வழியாக சிரமமின்றி பெற உதவி செய்யும்.

4. விழுப்புரத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா

விழுப்புரத்தில் உள்ள சிப்காட் தொழில் பூங்காவில், தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்படும்.

5. நீலகிரி மாவட்டத்தில் கம்பியில்லா தொடர்பு (Wireless Connectivity in Nilgiris District)

தற்போது இணையதள வசதிகளைப் பெற கம்பி வழி இணைப்பு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், தேவைப்படும் நேரங்களில் கம்பியில்லா இணைப்பு அளிப்பது அவசியமாகிறது. இதனால் நீலகிரி மாவட்டத்தில் கம்பியில்லா இணைப்பு தேவையுள்ள இடங்களில் வழங்கப்படும்.

6. ஆண்டுதோறும் இணையதளத்தில் தமிழ் தகவல்களை மேம்படுத்துவதற்கு ஆன்லைன் தமிழ்ப் போட்டிகள்(Annual Online Tamil Contest for Promoting Tamil content on Internet)

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெறும் தமிழ் இணைய மாநாட்டின்கீழ் இத்திட்டத்திற்கு ஏற்ற தகவல் பக்கங்களை தீட்டும் வண்ணம், கல்லூரி மாணவ, மாணவியரிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் போட்டி தகவல் பக்கங்கள் வரவேற்கப்பட்டுள்ளன. இணையதளத்தில் அதிக அளவில் தமிழ் தகவல் பக்கங்களை ஏற்படுத்திட இதுபோன்ற ஆன்லைன் போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட உள்ளன.

2010 மே 3]

7. மின் ஆளுகை செய்தி மடல் (E-Governance News letter)

தகவல் பரிமாற்றமானது, துறைகளிடையே சிறந்த வழிமுறைகளை பகிர்ந்துகொள்வதற்கும், மற்ற மாநிலங்கள் மற்றும் நாடுகள் ஆகியவற்றிலிருந்து சிறந்த வழிமுறைகளை கற்றுக்கொள்வதற்கும் மிகவும் அவசியமான ஒன்றாகும். தமிழ்நாடு மின் ஆளுகை முகமை அவ்வப்போது ஒரு மின்—ஆளுகை செய்தி மடலை வெளியிட உள்ளது. இச்செய்தி மடலில் மின் ஆளுகை செயல்பாடுகளில் கடைப்பிடிக்கப்படும் சிறந்த வழிமுறைகள், தமிழகம், பிற மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளில் செயல்படுத்தப்பட்டு வரும் குடிமக்களை மையமாகக் கொண்டுள்ள சேவைகள் பற்றிய செய்திகள் இடம்பெறும்.

8. தமிழ் விக்ஷ்னரி (Tamil Wiktionary)

அகராதிகளை இணையத்தில் இலவசமாக உபயோகிப்பதற்கான திட்டம் விக்ஷ்னரி எனப்படுகிறது. 150-க்கு மேற்பட்ட மொழிகளில் விக்ஷ்னரி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பன்னாட்டுத் தமிழ்ப் பயிற்சி இணையத்தால் வெளியிடப்பட்ட கலைச்சொல் பேரகராதியை அனைவரும் பயன்பெறும் வகையில், விக்ஷ்னரியில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

9. அனைத்துத் துறைகளிலும் மின்னணு வடிவில் உள்ள அரசு குடிமக்கள் சேவைகள் மக்கள் கணினி மையங்கள் மூலம் வழங்கப்படும்

மக்கள் கணினி மையங்கள் என அழைக்கப்படும் பொது சேவை மையங்கள் அரசு, தனியார் மற்றும் சமூக சார் சேவைகளை அளிப்பதற்கு முன் நிற்கும் சேவைப் புள்ளிகளாக உருவாக்கப்பட்டன. பொது மக்கள் தாங்கள் வசிக்கும் இடத்திற்கு அருகிலேயே அரசின் சேவைகளை திறம்படவும், வெளிப்படையாகவும் நம்பிக்கையுடனும் மற்றும் கட்டுப்படியாகக் கூடிய செலவிலும் பெற உதவுவதே இம்மையங்களின் நோக்கமாகும். மக்கள் கணினி மையத்தின் முக்கிய நோக்கம் தமிழகத்தில் அனைத்து கிராம மக்களும் அரசின் சேவைகளைப் பெற வேண்டும் என்பதேயாகும். இந்நோக்கத்தை சார்ந்து இதுகாறும் மின்னணு வடிவில் உள்ள எல்லா அரசு-குடிமக்கள் சேவைகளும் மக்கள் கணினி மையங்கள் மூலமாகவும் வழங்கப்படும்.

[2010 மே 3

10. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மின் அஞ்சல் முகவரி (E-mail IDs for MLAs)

தங்களது சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து குடிமக்களின் பிரதிநிதிகளாக தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் (MLAs) திகழ்கின்றனர். ஒவ்வொரு குடிமகனும் தன்னுடைய கோரிக்கைகளை எந்த நேரத்திலும் தடையின்றி எளிதாக தன்னுடைய தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினரிடம் எடுத்துரைக்கும் வகையில், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் தொகுதிவாரியாக பிரத்தியேகமான மின் அஞ்சல் முகவரி ஏற்படுத்தித் தருவது மிக அத்தியாவசியமாகிறது. பொது மக்கள் தங்கள் குறைகளை மக்கள் பிரதிநிதிகளிடம் மின் அஞ்சல் மூலமாக தெரிவித்து அவற்றை நிவர்த்தி செய்து கொள்ளலாம். மக்களுக்கு சிறப்பான வகையில் சேவை செய்ய, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும், பிரத்தியேகமான மின் அஞ்சல் முகவரி ஏற்படுத்தித் தரப்படும்.

11. தகவல் தொழில்நுட்பம் பயிலும் கிராமப்புற மாணவர்களுக்கு பன்னாட்டு மற்றும் தனியார் நிறுவனங்களில் பயிற்சி

தகவல் தொழில்நுட்பத்தினால் ஏற்படும் பயனை, இம்மாநிலத்தில் உள்ள அனைவருக்கும் கொண்டு சேர்க்க இவ்வரசு தீவிரமாக பாடுபட்டு வருகிறது. தகவல் தொழில்நுட்பத்தில் தேர்ச்சிப் பெற்றுள்ள கிராமப்புற மாணவர்கள், நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெறுவதற்குத் தங்களை தயார் செய்து கொள்ள வேண்டியுள்ளது. தமிழகத்தில் அறிவுசார் திறனை வளர்ப்பதற்கும், கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை ஊக்குவிப்பதற்கும் தேவையான பயிற்சி மிகவும் உதவியாக இருக்கும். தமிழக கிராமப்புறங்களில் உள்ள கல்லூரி மாணவர்களுக்கு பிரபலமான நிறுவனங்களின் உதவியோடு நிறுவன சூழலில் பயிற்சி அளிப்பதற்கு சிறப்புத் திட்டம் வகுக்கப்படும்.